


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.6.2023) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.6.2023) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், “அண்ணல் அம்பேத்கர்” தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு தொழில் தொடங்குவதற்கான ஆணைகளை வழங்கினார். உடன் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் வி.அருண்ராய் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



**நோ**ய் தீரக் கண்டுபிடிக்கப்பட்ட
கசப்பு மருந்து
தந்தை பெரியாரின்
வழி ;
அந்தக் கசப்பு
மருந்தினைத்
தேனில் குழைத்துத்
தந்து நோய் போக்க
முனைவது
அறிஞர் அண்ணாவின்
வழி!

**.....முத்தமிழறிஞர் கலைஞர்....**

### சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் - முன்னாள் பிரதமர்

# வி.பி.சிங் சிலை நிறுவ ஆணையிட்ட முதல்வருக்கு நன்றி!

## சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, ஜுன் 29-*

முன்னாள் பாரத பிரதமர் வி.பி.சிங் சிலையினை சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நமது சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் சங்கத் தலைவர் ப.ஆறுமுகம் தலைமையில் பொருளாளர் கே.சீனிவாசன் முன்னிலையில் நிறுவ ஆணையிட்ட அச்சங்க செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

26.06.2023 மாலை 4 மணி அளவில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் கூடிய சங்கச் செயற்குழுவின் சிறப்புக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

20.04.23 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியாவின் பெருமைமிகு பிரதமர்களில் ஒருவரும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்விக்கும், வாழ்வுக்கும் வழிகாட்டிய மாமனிதர் வி.பி.சிங் அவர்களின் முழு உருவச்சிலை, தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நிறுவப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனை வரவேற்று நமது சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பாக அச்சிலையினை நமது மாநிலக் கல்லூரி வளாகத்தினுள் நிறுவ வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம்.

நமது தமிழக முதல்வர் அவர்கள், நமது கோரிக்கையினை ஏற்று, மாமனிதர் வி.பி.சிங் அவர்களின் முழு உருவச்சிலை நமது சென்னை மாநிலக் கல்லூரியில் நிறுவப்படும் என்று 25.06.2023 அன்று அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு நமது சங்கத்தின் கோரிக்கைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் என்பதில் நமது சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மனம் நெகிழ்ந்து நன்றிகளை உரித்தாக்கு கிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### இந்தியாவிலேயே முதன் முறையாக - புழல் மத்திய சிறையில்

# பெண் சிறைவாசிகளால் இயக்கப்படும் பெட்ரோல் பங்க்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி ஆய்வு செய்தார்!

*சென்னை, ஜுன் 29-*

இந்தியாவிலேயே முதல் முறையாக, பெண் கைதிகள் மட்டும் இயக்கும் பெட்ரோல் பங்க் சென்னை அருகே புழல் சிறை வளாகத்தில் கட்டப்பட்டு வருகிறது. இந்த பங்க்கை ஒரு மாதத்தில் திறப்பதற்குரிய நடவடிக்கையில் சிறைத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக சிறைத் துறை, கைதிகளை நல்வழிப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கடந்த 2018ஆம் ஆண்டு கைதிகள் பெட்ரோல் பங்க், சென்னை புழலில் முதல் முறையாக திறக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து திருச்சி, வேலூர், கோவை உள்ளிட்ட 5 இடங்களிலும் சிறைத் துறை சார்பில் பெட்ரோல் பங்க்குகள் திறக்கப்பட்டன. இந்த பங்க்குகளை தற்போது ஆண் கைதிகள் இயக்கி வருகின்றனர். நன்னடத்தை கைதிகள் தேர்வு செய்யப்பட்டு, உரிய பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர், பெட்ரோல் பங்க்குகளில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பெட்ரோல் பங்க்கு மூலம் சுமார் 25 கைதிகள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். பெட்ரோல் பங்க் மூலம் சிறைத்துறைக்கு நல்ல வருவாய் கிடைப்பதுடன், கைதிகளும் சம்பாதித்து வருகின்றனர்.

இந்த திட்டத்தை மேலும் விரிவாக்கும் வகையில், புழல் சிறை வளாகத்தில் பெண்கள் தனிச்சிறை அருகே ரூ.1.92 கோடி மதிப்பில் 1,170 சதுர மீட்டர் பரப்பளவில் மற்றொரு பெட்ரோல் பங்க் கட்டப்பட்டு வருகிறது.

இந்த பெட்ரோல் பங்க்குகளை பெண் கைதிகள் மட்டுமே இயக்கவுள்ளனர். ‘இந்தியாவிலேயே முதல் முறையாக பெண் கைதிகள் மட்டும் இயக்கக் கூடிய பெட்ரோல் பங்க் புழலில்தான் திறக்கப்படுகிறது.

இது ஒரு மாதத்தில் திறக்கப்படும்’ என்று சிறைத் துறை டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி தெரிவித்தார். இந்த பெட்ரோல் பங்க்கின் ஒரு பகுதியில் கைதிகள் தயாரிக்கும் பொருள்களும் விற்பனை செய்யப்படும்.

பெட்ரோல் பங்க் கட்டுமானப் பணிகளை தமிழக சட்டம், நீதி, சிறைகள் சீர்திருத்தப் பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திங்கள் கிழமை ஆய்வு செய்தார்.

அவருடன் டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி, சிறைத் துறை டி.ஐ.ஜி.க்கள் இரா. கனகராஜ், ஆ.முருகேசன் ஆகியோர் இருந்தனர். பின்னர், அமைச்சர் எஸ். ரகுபதி, புழல் சிறை வளாகத்தில் நடைபெற்ற ‘சிறைகளின் கலை’ என்ற புதிய திட்ட தொடக்க விழாவில் பங்கேற்றார்.

இந்தத் திட்டத்தின்படி, கைதிகளுக்கு தியானம், யோகா, இசை, நாடகம், இலக்கியம், விளையாட்டு போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

# பருவ மழையை எதிர்கொள்ள - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் எ.வ.வேலு அதிகாரிகளுடன் கலந்தாய்வு!

*சென்னை, ஜுன் 29 -*

சென்னை, தலைமைச் செயலகத்தில், பருவ மழையை எதிர்கொள்வதற்கு எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, நேற்று முன்தினம் (27.6.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், பல்வேறு மாவட்டங்களில், நடைபெற்று வரும் சாலைப்பணிகள் மற்றும் பாலப்பணிகள் அனைத்தும், மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே, (அதாவது அக்டோபர் மாதம்) முடிக்க வேண்டும் எனவும், ஆகஸ்ட் மாதத்தை, பாலம் பராமரிப்பு மாதமாகக் கொண்டு, பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள், வடிகால்களில் அடைப்புகள் இருந்தால் உடனே அகற்ற வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், மெட்ரோ, கழிவுநீரகற்று வாரியம் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாகவே, சாலைகளில் தோண்டப்பட்ட பள்ளங்களை மறுசீரமைப்புப் பணிகளை முடிக்க வேண்டும் என்றும், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், சாலைகளை தோண்ட அனுமதி அளிக்கக் கூடாது. அனுமதிக்கப்பட்ட சாலைகளில் தோண்டும் பணிகள் அனைத்தையும் அக்டோபர் மாதத்திற்குள் மறுசீரமைப்புப் பணிகளை முடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் பொறியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்கள்.

சாலை ஓரங்களில் உள்ள காய்ந்து, உடையும் நிலையில் உள்ள மரக்கிளைகளை அகற்ற வேண்டும் எனவும், மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக, உயர்மட்ட புருவங்களை வெட்டுதல் போன்ற பணிகளை செய்ய வேண்டும் எனவும், மின் அறுவை இயந்திரம், ஜெனரேட்டர், மின்சார நீரேற்று பம்புகள் மற்றும் லாரிகள் போன்ற அனைத்து இயந்திரங்களையும் உடனடியாகக் கொண்டு செல்ல ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும், தேவைகளின் அடிப்படையில், மணல் பைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும், பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிட்டார்கள்.

மேலும், மழைநீரால் பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளங்கண்டு, முன்கூட்டியே சீரமைக்க தயாராக இருக்க வேண்டும் என்றும், அவசர கால பணிகளுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், மழைக் காலத்தில் வாகன சுரங்கப்பாதைகள் மற்றும் பாதசாரிகளின் சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க தேவையான நீரேற்று பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

அண்ணா சாலை, பூந்தமல்லி சாலை, ஜவகர்லால் நேரு சாலை கத்திப்பாரா முதல் கோயம்பேடு வரை, ஜெனரல் பீட்டர்சன் சாலை, காந்தி இர்வின் பாலம், திருவள்ளுவர் சாலை, இராமபுரம் சாலை, கொளத்தூர் சாலை, சென்னை தினத்தந்தி அலுவலகம் முன்பாக போன்ற இடங்களில் நடைபெறும் பணிகளை போர்க்கால அடிப்படையில், அடுத்த 15 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும், இந்த வருடம் நிரந்தர வெள்ள சீரமைப்புப் பணிகளுக்காக 46 பணிகளுக்கு ரூ.105 கோடி மதிப்பில் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பணிகளுக்கு அனைத்தும் உடனடியாக ஒப்பந்தம் கோரப்பட்டு, அனைத்து பணிகளும் அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

கொளப்பாக்கம் சாலை, அணை ஏரி போன்ற இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து செயல்படுத்தி முடிக்க வேண்டும் எனவும், மழைநீர் வடிகால் பணிகளை கண்டறிந்து விரைந்து முடிக்க வேண்டும். மேலும், இந்த ஆண்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிகால்களில், மண், குப்பைகள் போன்றவை வடிகால்களில் செல்லாத வகையில், “தடுப்பு வலைகள்” விரைவாக அமைக்க வேண்டும் எனவும் அமைச்சர் எ.வ.வேலு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா. சந்திரசேகர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

### தமிழகத்தில் பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு

# மாலை நேர வகுப்புகள் கட்டாயமில்லை!

## பள்ளிக் கல்வித்துறை தகவல்!

*சென்னை, ஜுன் 29-*

தமிழ்நாட்டில் பொதுத் தேர்வு எழுதும் 10, 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் கட்டாயமில்லை என பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது. தேவைப்படும் மற்றும் விரும்பும் பள்ளிகள் மாலை நேர சிறப்பு வகுப்புகளை நடத்திக் கொள்ளலாம் எனவும் கூறபட்டுள்ளது.

தமிழகத்தில் 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கோடை விடுமுறை முடிந்து 2023-24ம் கல்வியாண்டுக்கான பள்ளிகள் கடந்த 12ந்தேதி முதல் திறக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவ - மாணவிகளுக்கு கடந்த 14ந் தேதி முதல் வகுப்புகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. கோடை விடுமுறை விடப்பட்டிருந்த நிலையில் வெயிலின் தாக்கம் காரணமாக பள்ளி திறப்பு தள்ளி வைக்கப்பட்டது. இதன் காரணமாக சனிக்கிழமைகளிலும் வகுப்புகள் நடைபெறும் என பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அறிவித்திருந்தார்.

இதனிடையே, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஜுன் 27 அன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பொதுத்தேர்வை சந்திக்கும் 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்று பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டதாக தகவல் வெளியானது. இந்த நிலையில், மாலை நேர வகுப்புகள் கட்டாயம் என்ற தகவலுக்கு பள்ளிக் கல்வித்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கல்வித்துறை அதிகாரிகள் கூறுகையில்:

பொதுத் தேர்வை எழுதும் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவது எப்போதும் நடைபெறுவதுதான். தேவைப்படும் மற்றும் விரும்பும் பள்ளிகள் மாலை நேர சிறப்பு வகுப்புகளை நடத்திக் கொள்ளலாம். இது கட்டாயமில்லை. அறிவுறுத்தலாகவே முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது என்று கூறினர்.